வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 22 of 2017

வழக்கு சாட்சி - PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தன்னாசிபாண்டியன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் ஓய்வு |
| தந்தை பெயர் | : | சீனியப்பன் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.03.2026.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 03.03.2026.**

1) நான் தற்போது காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்று மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 23.01.2012 ஆம் தேதி 15.00 மணிக்கு அவிநாசிபாளையம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது கருணை பாளையம் பிரிவு சேகர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அவிநாசிபாளையம் காவல் நிலைய குற்ற எண் 43/2012 சட்டப்பரிவு 380 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.ச.ஆ.7** ஆகும்.

2) வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். பின்னர் சாட்சிகள் சேகர், ராணி, சிவன்மலையான், பரமேஸ்வரன், ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.01.2012 ஆம் தேதி காலை 10.00 மணியளவில்இவ்வழக்கு சம்மந்தமாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கொடுவாய் பொள்ளாச்சி ரோடு பிரிவில்

நின்றுக்சொண்டிருந்த எதிரியை வாதி அடையாளம் எதிரி சீனிவாசனை கைது செய்தும் சாட்சிகள் செல்வராஜ் மற்றும் துரைசாமி முன்னிலையில் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் திருடிய பணத்தில் மீதம் இருந்த ரூபாய் 600 ஐ கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ. 8** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.தசா.ஆ.6 ஆகும். எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்றம் காவலுக்கும் மற்றும் வழக்கு சொத்தை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அந்த படிவம் 91 **அ.தசா.ஆ. 9** ஆகும். சாட்சிகள் செல்வராஜ் மற்றும் துரைசாமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 29.01.2012 ஆம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 380 இதச பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

1) வழக்கு சம்மந்தமாக போன ரூபாய் 4000 தாள்களின் எண்ணிக்கை பற்றி புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையிலும் மற்றும் சாட்சிய வாக்குமூலங்களிலும் எந்த சாட்சிகளும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். திருட்டு சம்மந்தமான வழக்குகளில் கைரேகை சேகரிப்பது முதன்மையானது என்றால் சரிதான். இந்த வழக்கில் கைரேகை எதுவும் சேகரிக்கப்படவில்லை என்றால் புகாரில் எதிரியின் பெயர் குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும் போது பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியின் மாமனாருக்கும் எதிரிக்கும் உரிமையியல் சம்மந்தமான பிரச்சனை இருந்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. முன்விரோதம் காரணமாக எதிரி பொய்யாக கொடுக்கப்பட்ட

**புகாரின் மீது சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.**

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA
Date: 2026.03.03 17:41:44 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.